அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 12/94

எனது இல. 111/0266/2/68(எல்/ஏ)111(1)
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
1994.02.23.

எல்லா செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

1993 டிசெம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு விசேட முற்பணம் வழங்குதல்.

1993 டிசெம்பர் இறுதியில் ஏற்பட்ட கடும்மழை, வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட/சொத்துக்கள் அழிந்த வடக்கு, வடமத்திய, வடமேற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அரச உத்தியோகத்தர்களுக்கு வட்டி அறவிடாத விசேட முற்பணமாக 1000/-ரூபாய் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02. வெள்ளப் பெருக்கினால் உத்தியோகத்தர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டது/சொத்துக்கள் அழிந்தது உண்மையெனக் கொடுப்பனவு அதிகாரிகள் திருப்தியடைந்த பின்னர் மாத்திரம் கொடுப்பனவுகளைச் செய்ய வேண்டும்.

03. இந்த முற்பணம் சமமான 10 தவணைக் கட்டணங்கள் மூலம் அறவிடப்பட வேண்டியதுடன் "அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம்" "பீ" கணக்கில் பற்று வைக்க வேண்டும்.

04. இந்த முற்பணம் தொடர்பிலான கழிவுகள் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள 40% மற்றும் 33 1/3% எல்லைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

05. அமய மற்றும் தற்காலிக நிலையிலான உத்தியோகத்தர்களுக்கு இந்த முற்பணம் வழங்கப்படுமிடத்து உறுதிப்படுத்தப்பட்ட ஒரு உத்தியோகத்தர் பிணையாளியாக இருக்க வேண்டும்.

06. இந்தச் சுற்றறிக்கை திறைசேரியின் ஒருங்கிசைவுடன் வெளியிடப்படுகிறது என்பதைத் தயவுடன் கவனிக்கவும்.

ஒப்பம்: வை.பீ.புஸ்ஸெதெனிய.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.